**தலைப்பு 194 - தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 194 - தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 30 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,440.55 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 858.61 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 581.94 மில்லியன் அதாவது 40 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 101.74 | 94.14 | 7.60 | 7.47 |
| மூலதனம் | 1,338.81 | 764.47 | 574.34 | 42.90 |
| மொத்தம் | 1,440.55 | 858.61 | 581.94 | **40.40** |

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 19401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.00 | 1.44 | 0.20 | 1.15 | 20.00 | 3.73 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0419/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 0.06 மில்லியனாக இருந்தது.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 6000/0000/00/0013/0110/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.07 மில்லியனாக இருந்தது.

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 120.45 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்தத் தேறிய நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 24 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக அந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு 12 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### 3.2 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைச்சினால் செயல்நிமித்த உபகட்டுநிதி வழங்கும் போது பணிகளுக்குரிய முற்பணத்திற்கான மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்ளாது முற்பணம் வழங்கப்பட்டமையினால் பணி நிறைவுபெற்ற பின்னர் எஞ்சிய மீதி 15 சந்தர்ப்பங்களில் 41 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.3.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 செப்தெம்பர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.3.2 உள்ளகக் கணக்காய்வு

இந்த அமைச்சிற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. கோரப்பட்ட பிரகாரம் அமைச்சிற்கு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்படாமையினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை தாபிப்பதற்கு முடியாதிருந்ததாக செயலாளரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

#### 3.3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினால் தீர்க்கப்படாத வருடமொன்றிற்குக் குறைந்த காலமாகக் கொண்டுவரப்படுகின்ற பொறுப்புக்கள் ரூபா 301 மில்லியனாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிப்பிரமாணம் 94(1) இற்கு இணங்காமல் 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி ரூபா 43 மில்லியன் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### 3.5 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

**(அ) பாடசாலை கணனி ஆய்வுகூட செயற்திட்டம்**

முன்னைய ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சினால் நிறைவேற்றப்பட்ட மேற்கூறப்பட்ட செயற்திட்டம் 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதி முதல் தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் அமுல்படுத்த வேண்டியிருந்தது. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டிற்கு தொடர் வேலையாக்கப்பட்ட செயற்பாடுகளும் 2015 ஆம் ஆண்டின்போது அமைச்சினால் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பணிகளினதும் செயல்முன்னேற்றம் கீழே காணப்பிக்கப்படுகின்றது.

| விபரம் | 2015 | 2014 ஆம் ஆண்டிலிருந்து தொடர்வேலையாக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின்போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை | நிதிஏற்பாடு |
|---|---|---|---|
| | | | ரூபா. மில்லியன் |
| நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை | 79 | 138 | 400 |
| பௌதீக செயல்முன்னேற்றம் | 39 | 136 | 248 |
| எஞ்சியவை | 40 | 2 | 152 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 684 கணனி ஆய்வுகூடப் பாடசாலைகளை நிர்மாணிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. அதில் 444 பாடசாலைகள் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைந்ததாக கேகாலை, அம்பாறை, அனுராதபுரம் போன்ற 03 மாவட்டங்களை மாத்திரம் மேவுகை செய்திருந்தது. அது இலக்கிடப்பட்ட நிர்மாணங்களில் 65 சதவீத அளவாக இருந்தது. எஞ்சிய 35 சதவீத அளவும் 22 மாவட்டங்களை மேவுகை செய்யும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது.

(ii) சகல பாடசாலை கணனி ஆய்வு கூடத்திற்காகவும் ஒரு பாடசாலைக்கு இரண்டு ஆசிரியர்கள் வீதம் பயிற்சியளிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. ஸ்தாபிக்கப்பட்ட 93 பாடசாலை கணனி ஆய்வு கூடங்களுக்காக இரண்டு ஆசிரியர்கள் வீதம் 186 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டிய போதிலும், பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 152 மாத்திரமாக இருந்தது. 2015 ஆம் அண்டின் போது களுத்துறை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 44 ஆய்வுகூடங்களுக்காக பயிற்சியளித்தல் களுத்துறை மாவட்டத்தின் 25 ஆசிரியர்களுக்காக மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட பிரகாரம் சகல ஆசிரியர்களையும் பயிற்றுவிப்பதற்கு வசதியீனமாக இருந்ததுடன் ஆசிரியர்களில் பயிற்சி பெறாதிருந்த பாடசாலைகளின் ஆசிரியர்களுக்காக பயிற்சி செயலமர்வொன்றை எதிர்காலத்தில் நடாத்துவதற்கு தயார்படுத்தப்பட்டிருந்ததாக அமைச்சின் செயலாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

(iii) பாடசாலை கணனி ஆய்வுகூடத்தைத் தெரிவுசெய்யும் போது வேறொரு செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை கணனி ஆய்வுகூடமொன்று கிடைக்கப் பெறாத பாடசாலையொன்று தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், செயற்றிட்டத்தினால் பாடசாலை தெரிவு செய்யும் போது அதுவும் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(iv) அம்பாறை மாவட்டத்தில் 125 பாடசாலை கணனி ஆய்வுகூடங்களை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 93 பாடசாலைகளில் மாத்திரம் திறக்கப்பட்டிருந்தது. அதன் செயல்முன்னேற்றம் 74 சதவீதமாக இருந்தது.

(v) அம்பாறை மாவட்டத்தின் பாடசாலைகளுக்காக கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட கணனி மற்றும் உபபாகங்கள் 2015 ஆம் ஆண்டில் மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தாபிக்கப்பட்ட பாடசாலை கணனி ஆய்வுகூடத்திற்காக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் 32 பாடசாலைகளுக்காக 2016 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையில் கணனி மற்றும் உபபாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் கணனி வழங்குவதற்கு முன்னர் 16 பாடசாலைகளில் இணையத்தள வசதி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) மாவட்ட தகவல் நிலைய நிர்மாணம்**

மாவட்ட தகவல் நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்றிட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் நாடு முழுவதும் 25 மாவட்ட தகவல் நிலையங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்றிட்டம் முன்னைய ஆண்டின்போது தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதி தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்றிட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டிற்காக 10 மாவட்ட தகவல் நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் எந்தத் தகவல் நிலையமும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆம் ஆண்டின் நடைமுறை வேலையான 06 மாவட்ட தகவல் நிலையங்களில் 04 நிலையங்கள் களுத்துறை, புத்தளம், காலி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அதில் 03 நிலையங்கள் திறக்கப்பட்டிருந்ததுடன் மாத்தளை நிலையம் நிர்வாக ரீதியான சிக்கல்கள் காரணமாக வருடமொன்றிற்கு அண்ணளவான காலமாக திறந்து வைப்பதற்கு முடியாதிருந்தது.

(iii) தகவல் நிலையத்தை செயற்படுத்துதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) வவுனியா மாவட்ட தகவல் நிலையத்திற்காக கணனி மேசை மற்றும் கதிரை என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட ரூபா 436,000 தொகையான நிதிஏற்பாடு ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(v) அமைச்சினால் தயாரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் செயற்றிட்ட அறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டத்திலும் தகவல் தொழில்நுட்ப

நிலையத்தை தாபிப்பதற்குரிய கட்டிடம் மாவட்ட செயலாளரினால் வழங்கப்பட வேண்டிய போதிலும், கேகாலை மாவட்டத்தின் கலிகமுவ தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்காக மாத்திரம் புதிய இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* 2014 மே 30 ஆந் திகதி மேற்கூறப்பட்ட நிலையத்தை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நடப்பட்டிருந்த போதிலும், கட்டிட நிர்மாண திட்டம் மாவட்ட செயலாளருக்கு 2014 யூலை 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அடிக்கல் நாட்டும் ஆரம்ப விழாவிற்காக செய்திப்பத்திரிகை அறிவித்தல்களைப் பிரசுரித்தல் மற்றும் அச்சிடல் நடவடிக்கைகளுக்காக ரூபா 454,200 தொகை செலவிடப்பட்டிருந்தது.

* 2015 நவம்பர் 23 ஆந் திகதி கட்டிடத்தின் II ஆம் கட்டத்திற்காக புதிய ஒப்பந்தக்காரரொருவருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டத்திற்காக ரூபா 1,718,020 செலவினமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2016 யூலை 30 ஆந் திகதி வரையிலும் உரிய கட்டிட நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

* மேற்கூறப்பட்ட கட்டிட நிர்மாணத்திற்காக அமைச்சு நிதி ஏற்பாட்டைப் பெற்றிருந்த போதிலும் அதன் பின்தொடர் நடவடிக்கைகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டு முதல் 2016 யூலை 11 ஆந் திகதி வரையிலும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப நிலையம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 25 மாவட்ட தகவல் நிலையங்களுக்காக 25 தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் எந்தவொரு ஊழியரையும் ஆட்சேர்ப்பதற்கு தவறியிருந்தது.

**(இ) யாழ்ப்பாண தகவல் தொழில்நுட்ப பூங்கா**

தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சினால் முன்னைய ஆண்டுகளின் போது அமுல்படுத்தப்பட்ட யாழ்ப்பாண தகவல் தொழில்நுட்ப பூங்கா செயற்திட்டம் 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதி முதல் தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 19.49 மில்லியன் வருடாந்தம் செலவிடப்பட்டிருந்த போதிலும், கணனிப்பயிற்சி 444 பேர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) ஒவ்வொரு வருடமும் 06 மாதங்களுக்கு ஒரு தடவை அலுவலக முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் சர்வதேச இலத்திரனியல் தபால் தொடர்பான 01 செயலமர்வு மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் செலவிடப்பட்ட தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது அதன் செயல்முன்னேற்றம் போதியளவாக இருக்கவில்லை.

**(ஈ) தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம்**

தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட செலவினம் ரூபா 317.90 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 106.70 மில்லியன் நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. அது ஒட்டுமொத்த செலவினத்தில் 33 சதவீதமாக இருந்தது. 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான வளங்கள் ஆலோசனை சார்ந்த சகல சேவைகளும், ஆண்டின் ஆரம்பத்தின் போது திட்டமிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்ட செலவினத்தின் கீழ் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கும் சகல செயற்திட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு தேவையான நிறுவனம் சார்ந்த மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களை உள்ளடக்கியிருந்ததாக செயலாளரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு பிரதான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகள் தனித்தனியாகக் குறிப்பிடப்படாமையினால் முகவர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பௌதீக செயல்முன்னேற்றத்தை செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இணக்கஞ் செய்வதற்கு முடியாதிருந்தது.

(ii) பௌதீக செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முழுமையாக அமுல்படுத்தப்படாத 21 செயற்பாடுகள் காணப்பட்டதுடன் செயல்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கு குறைவாக அடையப்பெற்ற செயற்பாடுகள் 08 ஆக இருந்தன.

**3.6 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு**

**செயற்பாடற்ற வங்கிக் கணக்கு**

அமைச்சினால் பேணப்படுகின்ற வங்கிக் கணக்கொன்றில் ரூபா 200,500 மீதியொன்று காணப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 01 வருடத்திற்குக் குறைவான காலம் முழுவதும் இந்தக் கணக்கு செயற்பாடற்றுக் காணப்பட்டது,

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளுக்குப் புறம்பானவைகள்**

**(அ) டெப்லட் கணனி கொள்வனவு ரூபா 1,077,300**

One Government 2020 செயலமர்விற்கு இணையாக மாவட்ட தகவல் தொழில்நுட்ப திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அந்த திட்டத்தை கட்டியெழுப்புவதற்காக செயற்திறனான தொடர்பாடலொன்று மாவட்ட செயலாளர்களுடன் பேணப்பட வேண்டியிருந்தது. அதற்கு அடிப்படையாக மாவட்ட செயலாளர்களுக்கு டெப்லட் கணனி வழங்குவதற்கான தேவை ஏற்பட்டிருந்ததாக காண்பித்து 27 டெப்லட் கணனிகள் ரூபா 1,077,300 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) “Huawei m18” Android வகையில் 25 டெப்லட் கணனிகள் ஒன்று ரூபா 39,900 வீதம் கொள்வனவு செய்வதற்கு கொள்வனவுக் குழு தீர்மானித்திருந்த போதிலும், 27 டெப்லட் கணனிகள் 2014 திசெம்பர் 29 ஆந் திகதியும் 2014 திசெம்பர் 30 ஆந் திகதியும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) மாவட்ட செயலாளர்களுடன் செயற்திறனான தொடர்பாடலொன்றுக்காக இந்தக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பெருந்தெருக்கள் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சிற்கும் டெப்லட் கணனியொன்று வழங்கப்பட்டிருந்தது.

(iii) களுத்துறை, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை மற்றும் கேகாலை மாவட்டச் செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட டெப்லட் கணனிக்காக பெறுவனவுக் கட்டளை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இந்தக் கொள்வனவுகளுக்காக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அமைச்சு அலுவலகத்தை பழுதுபார்ப்பதற்காக அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்**

---

அமைச்சு அலுவலக வளவினை பழுதுபார்ப்பதற்காக 2015 செப்தெம்பர் 15 ஆந் திகதி ரூபா 621,455 தொகையும் குளியல் அறையினை பழுதுபார்ப்பதற்காக 2015 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 978,442 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,599,897 செலவிடப்பட்டிருந்தது. மேலும், 2015 ஒக்தோபர் மாதத்தின் போது ரூபா 337,500 தொகையும், 2015 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 442,500 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 780,050 தொகை செலவில் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த கொள்வனவுகளுக்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.8.1 ஆம் வழிகாட்டியின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த வழிகாட்டியை அடிப்படையாகக் கொண்டு உரிய அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாது கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளும் போது தொழில்நுட்ப அறிவினையுடைய உத்தியோகத்தரை வருவித்து அளவிடைப் பத்திரம் (BOQ) தயாரிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறு அளவிடைப் பத்திரம் தயாரிக்கப்படாமையின் காரணமாக 03 நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஒன்றுக்கொன்று ஒப்பீட்டு செய்து சரியான ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரரை தெரிவு செய்யப்பட்ட முறையை தெளிவாகக் குறிப்பிடுவதற்கு முடியாதிருந்தது.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்படும் போது ரூபா ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அதிகாரத்தைப் பெறவேண்டிய போதிலும், இந்த கொள்வனவுகளுக்காக அந்த அதிகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) அமைச்சு அலுவலக வளாகத்தை பழுதுபார்த்தல், குளியல் அறையினை பழுதுபார்த்தல் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு

செய்தல் போன்ற கொள்வனவுகளின் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 வழிகாட்டியின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சின் கொடுக்கல், வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் சிக்கனமற்ற தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனங்களினதும் அலுவலகங்களை இயலுமானவரை அரசின் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்குரிய கட்டிடங்களில் நடாத்திச் செல்ல வேண்டியிருந்தது. 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு மற்றும் இந்த அமைச்சு என்பன 2010 ஆம் ஆண்டு முதல் கால நீடிப்புச் செய்யப்பட்டு தனியார் கட்டிடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 16.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(அ) 2012 யூலை 04 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவினால் தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் அலுவலகக் கட்டிடத்திற்காக செலவிடப்பட்ட மேலதிக செலவினத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் அலுவலகக் கட்டிடம் 06 மாதகால எல்லைக்குள் வேறொரு பொருத்தமான இடத்தில் தாபிப்பதற்கு இணங்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அக்கட்டளை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.9 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 08 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 29 | 02 | 27 |
| (iii) | இரண்டாம் நிலை | 33 | 19 | 14 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 15 | 05 |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | மொத்தம் | 95 | 45 | 50 |

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 50 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், 2015 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டமை தொடர்பாக பதவியணியினர் வெற்றிடங்கள் காரணமாக இருக்கவில்லை.

(ii) 2010 மே 14 ஆந் திகதிய CA/I/17/1 ஆம் இலக்க அரசாங்க செலவின முகாமைத்துவம் தொடர்பான சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணியினர் 15 பேர் வீதம் இருக்க வேண்டிய போதிலும், அதில் 21 பேர் வீதம் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.